பால்வளத்துறை – பால் விற்பனை விலை குறைத்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**காால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (பா.உ.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.60**

**நாள்: 07. 05. 2021**
திருவள்ளுவர் ஆண்டு–2052
பிலவ வருடம் சித்திரை 24
படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை) எண்.112, கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத் (பாஉ.1) துறை, நாள் 17.08.2019.

----

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் 19.08.2019 முதல் கீழ்க்கண்டவாறு பால்கொள்முதல் விலை மற்றும் பால் விற்பனை விலையை உயர்த்தி ஆணை வெளியிட்டது:

(i) கொள்முதல் விலை:

அ) ஒரு லிட்டர் பசும்பாலின் தற்போதைய கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.4/– (ரூபாய் நான்கு மட்டும்) உயர்த்தப்பட்டு ரூ.28.00–ல் இருந்து ரூ.32.00 ஆக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது;

ஆ) ஒரு லிட்டர் எருமைப்பாலின் தற்போதைய கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.6/– (ரூபாய் ஆறு மட்டும்) உயர்த்தப்பட்டு ரூ.35.00–ல் இருந்து ரூ.41.00 ஆக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது;

(ii) விற்பனை விலை:

அ) அனைத்து பால் வகைகளுக்கான விற்பனை விலையினை லிட்டர் ஒன்றுக்கு ரூ.6/– (ரூபாய் ஆறு மட்டும்) உயர்த்தி விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

2. பொது மக்களின் நலன் கருதி பால் விற்பனை விலையினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அனைத்து பால் வகைகளுக்கான விற்பனை விலையினை லிட்டர் ஒன்றுக்கு ரூ.6/– லிருந்து ரூ.3/– ஆக (ரூபாய் மூன்று மட்டும்) குறைத்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

(த.பி.பா)

3. மேலே பத்தி இரண்டில் ஆணையிடப்பட்ட விலை குறைப்பு 16.05.2021 முதல் அமலுக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை, சென்னை-51.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை-35.
அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் '' வழியாக''
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை-35.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச்செயலர், சென்னை-9
மாண்புமிகு அமைச்சர் (பால்வளத்துறை) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, சென்னை-9.
அரசாணை (நிலை) எண்.112,
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (பாஉ1) துறை, நாள் 17.08.2019.
இருப்பு கோப்புகள் / உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்